**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திரு.C.ஜெயப்பிரகாஷ், M.Com., M.L.,**

**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்**

**2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**2056 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 13ம் நாள்**

**அசல் வழக்கு எண்.210/2024**

[CNR.No.TNDG190004602024]

P.வீராச்சாமி .... வாதி

// எதிராக //

N.மகாமுனி .... பிரதிவாதி

இவ்வழக்கு கடந்த 07.08.2024 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 12.08.2024 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 23.03.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.M.முத்துக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு.V.பெருமாள் அவர்கள் முன்னிலையாகியும், வாதி தரப்பு சாட்சிகளை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கு நிலுவையில் இருந்தபோது, பிரதிவாதி தரப்பில் எந்த முன்மொழிவும் இல்லையென பிரதிவாதி தரப்பு வழக்குரைஞர் தெரிவித்த நிலையில், கடந்த 04.02.2026 ஆம் தேதி பிரதிவாதியை அழைத்தும் முன்னிலையாகாததால் ஒருதலைபட்ச நிலைக்கு உட்படுத்தப்பட்டும், வழக்குரை, சான்றாவணங்கள், வழக்கு கோப்பு ஆகியவைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டும், வாதி தரப்பு வழக்குரைஞரின் வாதுரை கேட்கப்பட்டும், நாளதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீ ர் ப் பு ரை**

1. இவ்வழக்கானது கடனுறுதிச்சீட்டின்பேரில் தாவா தொகை, பின்வட்டி மற்றும் செலவுதொகை வேண்டி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதி தாக்கல் செய்த வழக்குரை சுருக்கம் :**

வாதியும், பிரதிவாதியும் கடந்த சுமார் 10 ஆண்டுகளாக நல்ல பழக்கம் உள்ள நபர்கள் ஆவார்கள். அதன் அடிப்படையில் வாதியிடம், பிரதிவாதி அவசர நிமித்தம் குடும்ப செலவினங்களுக்காகவும், சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும், கடந்த

06.01.2022 ஆம் தேதி கடனாக ரூ.3,50,000/− தொகையினை பெற்றுக்கொண்டு, மேற்படி தொகைக்கு மாதம் ரூ.1.00−க்கு ரூ.1.00/−வீதம் வட்டி சேர்த்து கூடிய அசலும், வட்டியும் வேண்டும்போது செலுத்துவதாக ஒப்புக்கொண்டு, வாதியின் பெயருக்கு பிரதிவாதி தாவா கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்துள்ளார். வாதி, பலமுறை பிரதிவாதியிடம் கடனுறுதிச்சீட்டிற்கான அசல், வட்டித்தொகையை திரும்ப செலுத்தும்படி கேட்டும், பிரதிவாதி தொகை ஏதும் செலுத்தாமல் காலம் கடத்தி வந்ததால், தாவா கடனுறுதிச்சீட்டிற்குரிய அசல் தொகைக்கு பின்வட்டியும், செலவு தொகையும் வாதிக்கு, பிரதிவாதியால் கிடைக்க வேண்டி இவ்வழக்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

3. **எதிர்வழக்குரையின் சுருக்கம் :**

தாவா பொய்யும் மோசடியுமாகும். பிரதிவாதி ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர இதர சங்கதிகளை வாதியே நிரூபிக்க வேண்டும். வாதியிடம், பிரதிவாதி சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.50,000/− கடன் கேட்டு, அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100க்கு ரூ.5.00 வீதம் வட்டி என்று கூறியதன் அடிப்படையில், கடன் தொகையின் பொறுப்புக்காக பிரதிவாதி பூர்த்தி செய்யப்படாத கடனுறுதிசீட்டில் கையொப்பம் செய்து கொடுத்து கடன் தொகை ரூ.50,000/− தொகையை பெற்று, மாதம் 1க்கு ரூ.2,500/− வீதம் வட்டி தொகையும் செலுத்தி, கடன் பெற்ற தேதியில் ஒரு வருட காலத்தில் வாதிக்கு அசல், வட்டி தொகையை செலுத்திவிட்டார். வாதியிடம், பிரதிவாதி கடனுறுதிசீட்டை திரும்ப கேட்டபோது, கடன் கணக்கு முழுவதும் தீர்ந்துவிட்டதால், எவ்வித நடவடிக்கையும் எடுக்க மாட்டேன் என்றும், தேடி எடுத்தவுடன் ஒப்படைப்பதாகவும் கூறியதை நம்பி, பிரதிவாதி கடனுறுதிசீட்டை திரும்ப பெற்றுக்கொள்ளவில்லை. இவ்வழக்கு அழைப்பாணை சார்வான பின்னர் வாதியை அணுகி விபரம்கேட்டபோது, பிரதிவாதி கொடுத்த தொகை முழுவதும் வட்டிக்கு சரியாகி விட்டதாகவும், மீண்டும் அசல் தொகை ரூ.50,000/−யை திருப்பி கொடுத்தால் தான் பெறுப்பிற்காக கொடுத்துள்ள பூர்த்தி செய்யப்படாத கடனுறுதிசீட்டை திருப்பி கொடுக்க முடியும் என்று கூறியுள்ளார். பிரதிவாதி மின்வாரியத்தில் பணிபுரிந்து வருவதால், பணம் பறிக்கும் நோக்கத்தில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு பொறுப்புக்காக கையெழுத்து செய்து கொடுத்திருந்த பூர்த்தி செய்யப்படாத கடனுறுதிசீட்டில் உள்ள கையெழுத்து

மாதிரியாக கொண்டு தனக்கு வேண்டியவர்களை கொண்டு பூர்த்திசெய்து கடனுறுதிசீட்டை உற்பத்தி செய்துள்ளார். வாதி இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் வழியாக பிரதிவாதிக்கு முன் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. வாதிக்கு வழக்கு தாக்கல் செய்ய வழக்குமூலம் இல்லை. தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவைகளை பரிசீலனை செய்து, கடந்த 29.10.2025ஆம் தேதியன்று கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.**

**1. தாவா கடனுறுதிசீட்டில் உள்ள கையொப்பம் போர்ஜரியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்று பிரதிவாதி கூறுவது சரியா?**

**2. கடந்த 06.01.2022ம் தேதியில் தாவா கடனுறுதிசீட்டினை வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்ததன் அடிப்படையில் தாவா தொகை, வட்டி, பின்வட்டி, செலவுதொகை வாதிக்கு பிரதிவாதி செலுத்த கடமைப்பட்டவரா?**

**3. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?**

**5.** வாதி தரப்பில், வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து, வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்து வழக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

6. **பிரச்சனைக்கான தீர்வுகள் :**

**1. எழுவினா 1 க்கான தீர்வு : தாவா கடனுறுதிசீட்டில் உள்ள கையொப்பம் போர்ஜரியாக தயாரிக்கப்பட்டுள்ளது என்று பிரதிவாதி கூறுவது சரியா?**

**1.1.** வாதியிடம் இந்த பிரதிவாதி கடந்த 06.01.2022ம் தேதி ரூ.3,50,000/– தொகையினை கடனாக பெற்றுக்கொண்டு, அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100–க்கு ரூ.1.00 வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு தாவா கடனுறுதிச்சீட்டினை பிரதிவாதி எழுதிக்கொடுத்ததாகவும், பிரதிவாதி ஒப்புக்கொண்டபடி தொகை செலுத்தவில்லை என்றும், எனவே, தாவா கடனுறுதிச்சீட்டில் கண்டுள்ளவாறு அசல், வட்டி, பின்வட்டி, செலவுதொகை பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு செல்லாக வேண்டும் என வாதி தரப்பில் வழக்கானது முன்னெடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

**1.2.** பிரதிவாதி, வாதியிடம், பிரதிவாதி சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.50,000/– கடன் கேட்டு, அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ரூ.5.00 வீதம் வட்டி என்று கூறியதன் அடிப்படையில், கடன் தொகையின் பொறுப்புக்காக பிரதிவாதி பூர்த்தி

செய்யப்படாத கடனுறுதிசீட்டில் கையொப்பம் செய்து கொடுத்து கடன் தொகை ரூ.50,000/− தொகையை பெற்று, மாதம் 1க்கு ரூ.2,500/− வீதம் வட்டி தொகையும் செலுத்தி, கடன் பெற்ற தேதியில் ஒரு வருட காலத்தில் வாதிக்கு அசல், வட்டி தொகையை செலுத்தி விட்டு கடனுறுதிசீட்டை திரும்ப கேட்டபோது, தேடி எடுத்தவுடன் ஒப்படைப்பதாகவும் கூறியதை நம்பி, பிரதிவாதி கடனுறுதிசீட்டை திரும்ப பெற்றுக்கொள்ளவில்லை என்றும், பிரதிவாதி மின்வாரியத்தில் பணிபுரிந்து வருவதால், பணம் பறிக்கும் நோக்கத்தில் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு பொறுப்புக்காக கையெழுத்து செய்து கொடுத்திருந்த பூர்த்தி செய்யப்படாத கடனுறுதிசீட்டில் உள்ள கையெழுத்து மாதிரியாக கொண்டு தனக்கு வேண்டியவர்களை கொண்டு பூர்த்திசெய்து கடனுறுதிசீட்டை உற்பத்தி செய்து வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் பிரதிவாதி தரப்பில் வழக்கானது முன்னெடுத்துச்செல்லப்பட்டது.

**1.3.** வழக்கு கோப்பினை கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும்போது, வாதிக்கு கடந்த 06.01.2022ம் தேதியில் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடனுறுதிச்சீட்டு வா.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா கடனுறுதிச்சீட்டான வா.சா.ஆ.1 ஆவணம் வாதியால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக எதிர்வழக்குரையில் பிரதிவாதி தரப்பில் ஒரு நிலைப்பாடு எடுக்கப்பட்டுள்ள போதும், வா.சா.1 முதன்மை சாட்சியத்தில் கடனுறுதிசீட்டு எழுதப்பட்ட விதத்தை பற்றி சாட்சியம் அளித்துள்ளதை நிராகரிக்கும் வகையில், தாவா கடனுறுதிசீட்டு மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்பதை பொறுத்து குறுக்கு விசாரணை செய்வதன் வழியாக வா.சா.ஆ.1யை பிரதிவாதி தரப்பில் நிராகரிக்கவில்லை.

**1.4.** இவ்வழக்கினை பொறுத்து பிரதிவாதி நீதிமன்றத்தில் இருந்து அசல் வழக்கில் கிடைக்கப்பெற்ற அழைப்பாணையை பெற்றுக்கொண்டு வழக்கேற்பிதழ் தாக்கல் செய்து, பின்னிட்டு நீதிமன்ற வழக்கு கோப்பை பார்வையிடாமல் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளார். எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு முன்பாக தாவா கடனுறுதிசீட்டை பார்வையிடாமல் எதனடிப்படையில் கடனுறுதிசீட்டு போர்ஜரியாக உற்பத்தி செய்யப்பட்டதாக எதிர்வழக்குரை சங்கதிகள் முன்வைக்கப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு பிரதிவாதிக்கு இருந்தும், பிரதிவாதி தரப்பில் நிரூபிக்கவில்லை. எனவே, தாவா கடனுறுதிசீட்டானது

வாதியால் போர்ஜரியாக உற்பத்தி செய்யப்பட்டது என்று பிரதிவாதி தரப்பில் எடுக்கப்பட்டுள்ள நிலைப்பாடானது நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**2. எழுவினா 2க்கான தீர்வு : கடந்த 06.01.2022ம் தேதியில் தாவா கடனுறுதிசீட்டினை வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்ததன் அடிப்படையில் தாவா தொகை, வட்டி, பின்வட்டி, செலவுதொகை வாதிக்கு பிரதிவாதி செலுத்த கடமைப்பட்டவரா?**

**2.1.** வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கும்போது, கடந்த 06.01.2022 ஆம் தேதி வாதியிடம், பிரதிவாதி அவசர நிமித்தம் குடும்ப செலவிற்காகவும், சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும் தொகை ரூ.3,50,000/– ரொக்கம் கடனாக பெற்றுள்ளதும், வாதிக்காவது, வாதியின் உத்தரவு பெற்றவருக்காவது தொகைசெலுத்துவதாக ஒப்புக்கொண்டு, கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்துள்ளது வா.சா.ஆ.1 ஆவணத்தின் வழியாக அறியமுடிகிறது.

**2.2.** வழக்குரை சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி, பிரதிவாதியை அணுகி கடனுறுதிச்சீட்டிற்கான தொகை செலுத்தும்படி கேட்டுள்ளது வா.சா.1 என்பவரின் சாட்சியத்திலிருந்து அறியமுடிகிறது. இவ்வழக்கின் பிரதிவாதி, வாதியிடம், சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.50,000/– கடன் பெற்று, அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ரூ.5.00 வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு, பூர்த்தி செய்யப்படாத கடனுறுதிசீட்டில் கையொப்பம் செய்து கொடுத்து கடன் தொகையை பெற்று, மாதம் 1க்கு ரூ.2,500/– வீதம் வட்டி தொகையும் செலுத்தி, ஓராண்டு காலத்திற்குள் அசல், வட்டி தொகையை செலுத்திவிட்டு, கடனுறுதிசீட்டை திரும்ப கேட்டபோது, தேடி ஒப்படைப்பதாகவும் கூறியதால் கடனுறுதிசீட்டை பெற்றுக்கொள்ளவில்லை என்றும், பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில் பிரதிவாதி தரப்பில் தகுந்த சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தாமல் இந்த வழக்கில் ஒருதலைபட்சநிலையில் உள்ளார். இந்நிலையில், மாற்றுமுறை ஆவணச்சட்டம் 1881, பிரிவு 118 (அ)– ன் கீழாக

பார்க்கும்போது, மாற்றுமுறை ஆவணம் ஒவ்வொன்றும் தகுந்த மறுபயனுக்காகவே ஏற்கப்பட்டது என்று அனுமானிக்க வேண்டும் என்று சட்டநிலைப்பாடு உள்ளது. வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் பிரதிவாதி செய்த கையொப்பம் எந்த சூழ்நிலையில் போடப்பட்டது என்பதை பிரதிவாதி நிரூபிக்காத காரணத்தினால், தகுந்த மறுபயனுக்காகவே வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டு பிரதிவாதியால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அனுமானிக்க வேண்டியுள்ளது. வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1 என்பவரின் சாட்சியத்தின் வழியாகவும், வா.சா.ஆ.1 சான்றாவணத்தின் வழியாகவும் வாதி தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. வா.சா.1 சாட்சியத்தின் வழியாக இவ்வழக்கிற்கான வழக்குமூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், வாதிக்கு வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் கண்டுள்ளவாறு பிரதிவாதி, வாதிக்கு தொகை செலுத்த கடமைப்பட்டுள்ளார். கடனுறுதிச்சீட்டில் மாதம் 1–க்கு ரூ.100/–க்கு ரூ.1.00/–வீதம் வட்டி செலுத்துவதாக பிரதிவாதி ஒப்புக்கொண்டிருப்பதால் வட்டியை பொறுத்து வாதி கணக்கிட்டுள்ளதை ஏற்றுக்கொள்வதே சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே, வழக்குரை தொகை ரூ.4,58,617/– தொகையினையும், அசல் தொகை ரூ.3,50,000/–தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த நாள்முதல் தீர்ப்பாணை நாள்வரை உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 34–ன் கீழாக ஆண்டொன்றுக்கு 9% வட்டியும், தீர்ப்பாணை நாள்முதல் தொகை வசூலாகும் நாள்வரை ஆண்டொன்றுக்கு 6% வட்டியும், வழக்கின் செலவுதொகையும் வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று தீர்மானிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**3. எழுவினா 3 க்கான தீர்வு : வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?**

தாவா கடனுறுதிச்சீட்டின் அடிப்படையில் வாதி கோரிவாறு வாதிக்கு தாவா தொகை கிடைக்கக்கத்தக்கது என்றும், வழக்கின் செலவுதொகையை வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்றும் மேலே கண்ட எழுவினாவில் தீர்மானித்துள்ள நிலையில், வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் எதுவுமில்லையென இந்த எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**7. முடிவில்,**

**வழக்குரை தொகை ரூ.4,58,617/– தொகையினையும், அசல் தொகை ரூ.3,50,000/ தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த 07.08.2024 நாள்முதல் தீர்ப்பாணை நாளான 27.03.2026ஆம் நாள்வரை ஆண்டொன்றுக்கு 9% வட்டியும், தீர்ப்பாணை நாள்முதல் தொகை வசூலாகும் நாள்வரை ஆண்டொன்றுக்கு 6% வட்டியும், வழக்கின் செலவு தொகையும் வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று வாதியின் வழக்கு செலவுதொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் நாள் அவையறிய திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.03.27 19:06:21 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**

**வாதி தரப்பு சாட்சிகள் :**

வா.சா.1 – வீராச்சாமி – வாதி

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | 06.01.2022 | வாதிக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடனுறுதிச் சீட்டு – அசல் | வா.சா.ஆ.1 |

**பிரதிவாதி தரப்பு சாட்சி** : இல்லை
**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.03.27 19:06:25 +0530

**சார்பு நீதிபதி,**
**ஒட்டன்சத்திரம்**